வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 05.02.2025 புதன்கிழமை | இதழ் : 36 | பக்கங்கள் : 12

# வரலாறு வழங்கிய வாய்ப்பை தவறவிட நாங்கள் தயாரில்லை

## சுதந்திர தின உரையில் ஜனாதிபதி



கொழும்பு, பெப்ரவரி 05

நாட்டின் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் உள்ள மக்கள் ஒரு வளமான எதிர்கால அரசையும் நவீன இலங்கையரையும் கனவு காணும் நேரத்தில் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது சிறப்பு வாய்ந்தது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வரலாறு வழங்கிய இந்த மகத்தான வாய்ப்பை நாம் தவறவிடுவதற்கு எந்த சட்டபூர்வமான உரிமையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

77ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் நேற்று காலை ஜனாதிபதி தலைமையில் சுதந்திர சதுக்க வளாகத்தில் நடைபெற்றன. இதில் உரையாற்றிய ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்

இந்த வருட சுதந்திர தினம் ஒரு சிறப்பு வாய்ந்த நாள் என்றும், சுதந்திரக் கனவை ஒன்றாகக் காண வேண்டும், ஒன்றாக நனவாக்க வேண்டும் என்றும் கடந்த காலத்தைப் பார்த்து இதுவரை கொண்டாடப்பட்டு வந்த சுதந்திரம், இன்று எதிர்காலத்தைப் பார்த்து கொண்டாடப்படுகிறது என்றும் ஜனாதிபதி கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாளை சாத்தியமாக்க ஆன்மீக தியாகங்களைச் செய்த அனைத்து துணிச்சலான மக்களுக்கும் இன்று அஞ்சலி செலுத்தும் நாள். மேலும், 1948 இற்குப் பிறகு, பிற

11



# இலங்கை சுதந்திர தினம் தமிழ் இனத்தின் கரிநாள்!

## கிளிநொச்சியில் மாபெரும் போராட்டம்

கிளிநொச்சி, பெப். 05

இலங்கையின் 77ஆவது சுதந்திர தினமான நேற்று தமிழர் தாயகத்தின் கரிநாள் என தெரிவித்தும் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும் கிளிநொச்சியில் மாபெரும் போராட்டம் நடைபெற்றது.

இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இக் கறுப்புக் கொடிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா

11

# யு.எஸ்.எயிட் நிதியுதவிகள் குறித்து அரசு விசாரணை நடத்தவேண்டும்!

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தல்

கொழும்பு, பெப். 05

இலங்கையில் சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனத்தின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

தனது எக்ஸ் தளத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிதியிலிருந்து பயனடைந்த அரசு சாரா

11

# சுதந்திர தினத்தில் தேசிய கொடியை இறக்கிவிட்டு கறுப்பு கொடி ஏற்றிய யாழ். பல்கலை மாணவர்கள்

யாழ்ப்பாணம், பெப். 05

யாழ். பல்கலைக்கழக பிரதான கொடி கம்பத்தில் பறந்த தேசிய கொடி மாணவர்களால் இறக்கப்பட்டு கறுப்புக் கொயேற்றப்பட்டு நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

77 ஆவது தேசிய சுதந்திர தினம் நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்ட நிலையில், யாழ். பல்கலைக்கழக பிரதான கொடிக் கம்பத்தில் பறந்த தேசியக் கொடி மாணவர்களால் இறக்கப்பட்டு கறுப்புக் கொடியேற்றப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

11



# வங்காலையில் கனிய மணல் ஆராய்ச்சிக்கு வந்த குழுவினரை திருப்பி அனுப்பிய மக்கள்

மன்னார், பெப். 05

மன்னார் வங்காலை கிராமத்தில் கடற்கரைப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை(4) மாலை கனிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குழு ஒன்றை அக்கிராம மக்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேற்றினர்.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் குழு ஒன்று நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வங்காலைக் கிராமத்தில் கடற்கரைப் பகுதியில் கனிய மணல் ஆராய்ச்சிக்காக சென்றுள்ளது.

கிராமத்தில் உள்ள எந்த தரப்பிடமும் எவ்வித அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல் சுமார் 20

11

# வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பிரகாரம் ஈழத் தமிழருக்கு தீர்வை வழங்கவேண்டும்

## பிரித்தானியாவிலும் கரிநாள் போராட்டம்

லண்டன், பெப். 05

வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பிரகாரம் ஈழத் தமிழர்களுக்கு தரவை வழங்க வேண்டும் பிரித்தானியாவில் வாழும் தமிழர்கள் நேற்று செவ்வாய்கிழமை சர்வதேச கவனயீர்ப்பு போராட்டமொன்றை லண்டனில் முன்னெடுத்தனர்.

இலங்கையில் நேற்று சுதந்திரதினம் கொண்டாடப்பட்ட நிலையில் இதனை கரிநாளாக கருதவேண்டும் என வடக்கு -

11

# ஆஸ்திரேலியாவில் நேற்று நடந்த தமிழர் ஒடுக்குமுறை தின பேரணி

## இனப்படுகொலை அறிக்கை கையளிப்பு



11

# தற்போதுள்ள அரசமைப்பை உடனடியாக இரத்துச் செய்க!

## ஜனாதிபதியிடம் கர்தினால் கோரிக்கை

கொழும்பு, பெப். 05

யுத்தத்தின் போர்வையில் நாட்டில் தோன்றியுள்ள சர்வாதிகார வெறி, நாட்டின் ஜனநாயகத்துக்கு ஒரு மரண அடி என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

எனவே, தற்போதுள்ள ஊழல் நிறைந்த அமைப்பை மாற்றி, நாட்டுக்கு உண்மையான சுதந்திரத்தை கொண்டு வர, தற்போதைய அரசமைப்பை உடனடியாக ரத்து செய்து, புதிய அரசமைப்பை

11

# சுதந்திரதினம் கரிநாள் என வலியுறுத்தி மட்டக்களப்பிலும் நேற்றுப் போராட்டம்!



11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் சீரற்ற காலநிலையால் நெற் செய்கை பெரிதும் பாதிப்படைவு!

கிளிநொச்சி, பெப். 05

கிளிநொச்சியில் நிலவிய சீரற்ற காலநிலையால் நெற் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக கிளிநொச்சி பதில் மாவட்ட செயலாளர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் பயிர் அழிவு தொடர்பாக நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தில் அண்ணளவாக 70 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

கடந்த வருட இறுதி மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் நிலவிய சீரற்ற காலநிலையினால் நெற்செய்கை அழிவு நிலைக்குச் சென்றுள்ளன.

அந்த வகையில் மழை வீழ்ச்சி மற்றும் சீரற்ற கால நிலையினால் எமது மாவட்டத்தின் பெரிய குளமான இரணைமடுக்குளம் நான்கு அல்லது ஐந்து தடவைகளுக்கு மேல் வான்பாய்ந்திருந்தது.

இதன் காரணமாக நெற் செய்கை பெரிதும் பாதிப்படைந்தது.

இந்நிலையில் இதனை மதிப்பிடும் முகமாக கமநல காப்புறுதிச் சபை, பிரதேச செயலகம், விவசாயத் திணைக்களம் ஆகிய இணைந்து மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இவை நேர அட்டவணையின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே, மழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி குறித்த குழுவினருக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (அ)





# வடக்கு முதல் தெற்கு வரை சக வாழ்வு சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், பெப். 05

வடக்கு முதல் தெற்கு வரை சக வாழ்வு சைக்கிள் ஓட்டுதல் நிகழ்வு பருத்தித்துறை முனையிலிருந்து தெய்வேந்திரமுனை வரை நேற்று முன் தினம் காலை ஆரம்பமாகியது.

2025 இற்கான இச்செயல் திட்டம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் அனுசரணையுடனும் நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கச் செயலகத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலர் ச.சத்தியசீலன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இருவர் இணைந்து ஓட்டும் குறித்த இரட்டைச் சைக்கிளானது ஒரு குடும்பத்தின் போக்குவரத்துக்கு இலகுவானதாக அமைந்துள்ளது.

இந்த சைக்கிளோட்டத்தில் ஒரு தம்பதியினரும் மாற்றுத் திறனாளி ஒருவரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் வடக்கின் பருத்தித்துறை முனையில் இருந்து ஆரம்பித்த சைக்கிள் ஓட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் ச.சத்தியசீலன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-02)

# சுதந்திரதினத்தை முன்னிட்டு வடக்கில் விசேட சோதனை!





வவுனியா, பெப். 05

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வடக்கில் விசேட சோதனை நடவடிக்கையை விசேட அதிரடிப்படையினரும், பொலிஸாரும் இணைந்து நேற்று முன்னெடுத்தனர்.

தெற்கில் இருந்து வடக்குக்கு செல்லும் ஏ-9 பிரதான வீதியில் தாண்டிக்குளம் பகுதியில் மூன்று இடங்களில் மோப்ப நாய்களின் உதவியுடன் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அதேவேளை, வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் வாகனங்கள் இரு இடங்களில் வழிமறிக்கப்பட்டு வாகன ஆவணங்கள் சோதிக்கப்பட்டதுடன், மோப்ப நாய்களின் உதவியுடன் வாகனங்களின் உட்பகுதியும் சோதனை செய்யப்பட்டது.

தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வரும் வாகனங்களும் ஓர் இடத்தில் வழிமறிக்கப்பட்டு சோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அத்துடன், மோட்டார் சைக்கிள்கள், பஸ்கள், பாரவூர்திகள் மற்றும் சொகுசு வாகனங்கள் என பலதும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (அ-10)




நாட்டின் 77 ஆவது சுதந்திர தின விழா முன்னிட்டு பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலக முன்றலில் மு.ப 8.04 மணிக்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனால் தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதேச செயலாளரின் சுதந்திர தின உரையும் சிரமதான நிகழ்வும் இடம் பெற்றது. (அ-02)

# பொதுமக்களுக்கான சேவையை வழங்குவதற்கு அனைவரும் உறுதியெடுத்துக்கொள்ள வேண்டும்

## வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரபாகரமூர்த்தி





வடமராட்சி, பெப். 05

பொது மக்களுக்கான துரித சேவையை வழங்குவதற்க்கு அனைத்து உத்தியோகத்தர்களும் உறுதியெடுத்துக் கொள்ளவேண்டும் என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினமான நேற்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் தேசிய கொடியேற்றி உறுதியெடுத்துக்கொள்ளும் நிகழ்வில் தேசியக் கொடியை ஏற்றிய பின் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் இதுவரை 22 தடவைகள் அரசியல் யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய அரசாங்கம் அரசியல் யாப்பு ஒன்றினை கொண்டு வரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. புதிய அரசாங்கத்தின் மூன்று கொள்கைகளில் கிளீன் சிறிலங்கா திட்டத்தின் கீழ் ஊழல் உட்பட அனைத்து கழிவுகளையும் அகற்ற வேண்டும். பொது மக்களுக்கான அரச சேவையை வழங்குவதற்கு அனைத்து உத்தியோகத்தர்களும் உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக அனைத்து உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (அ-02)

# முகக் கவசங்களை அணிய அறிவுறுத்து

கொழும்பு, பெப். 05

நாட்டின் பல பகுதிகளில் நேற்று முதல் எதிர்வரும் சில நாட்களுக்கு காற்றின் தரமானது ஆரோக்கியமற்ற நிலையில் காணப்படும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்றைய தினம் காற்றின் தரக் குறியீடு 85 முதல் 128 இற்கு இடைப்பட்ட அளவில் இருக்கும் என குறிப்பிடப்பட்டது.

இருப்பினும் வவுனியா, நுவரெலியா, புத்தளம், முல்லைத்தீவு, பொலனறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய நகரங்களில் காற்றின் தரக் குறியீடு மிதமான மட்டத்தில் காணப்படும்.

இதற்கமைய தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, முடிந்தவரை அனைவரும் முகக் கவசங்களை அணியுமாறும், சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவுறுத்தியுள்ளது. (அ)

# வவுனியா முழுவதும் பறந்த தேசிய கொடி



வவுனியா, பெப். 05

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டித்த நிலையில் வவுனியா நகர் முழுவதும் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

வவுனியா ஏ9 வீதியின் இரு பகுதிகளிலும், மணிக்கூட்டு கோபுரம், வைத்தியசாலை சுற்றுவட்டம் ஆகிய பகுதிகளில் தேசிய கொடி பறக்க விடப்பட்டன.

சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டித்து யாழ்.பல் கலைக்கழகம் உட்பட வடக்கு மாகாணத்தின் சில மாவட் டங் களில் கறுப்பு கொடிகள் பறக்க விடப்பட்டன. இந்நிலையில் வவுனியா நகர் முழுவதும் தேசிய கொடிகள் பறக்கவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.02.2025 புதன்கிழமை
பிலவ வருடம், தை 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தலைமையில்லா ஈழத் தமிழர்கள்

உரிமையை கோரும் இனத்தின் முதல் தகுதி என்பது அதற்கான அரசியல் தலைமையாகும். இனத்தின் சார்பில் கம்பீரமாக உலகத்தை எதிர்கொள்ளக் கூடிய ஒரு தலைமையில்லாது போனால், அந்த இனத்தின் பக்கம் என்ன நியாயங்கள் இருந்தாலும் கூட, அந்த இனத்தினால் அரசியல்ரீதியில் நிமிர முடியாது. இன்று வடக்கு மாகாணத்திற்கு வரும் அந்நிய தேசங்களைச் சேர்ந்தவர்கள் கேட்கும் முதல் கேள்வி - உங்களிடம் தலைமை இல்லையே - பின்னர் எவ்வாறு உங்களுடன் மற்றவர்கள் பேச முடியும்? ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் காணப்படும் ஒரு மிகவும் தவறான புரிதல் - பலரும், நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசியல் தலைவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பதாகும்.

உண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் என்னும் தகுதி ஒரு தலைமைக்கான அடையாளம் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவர் தலைவராக உயர முடியும். ஆனால், அதற்காக நாடாளுமன்ற உறுப்புரிமை தலைமையாகிவிடாது. ஈழத் தமிழ் சூழலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆனாலும் ஈழத் தமிழினம் அரசியல் ரீதியில் தலைமையற்ற ஓர் இனமாகவே இருக்கின்றது. இதன் பொருள் என்ன? நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற எவருமே தலைவராக வரக் கூடிய தகுதியுடன் இல்லை என்பதுதான். இந்த நிலையில்தான் ஈழத் தமிழரின் அரசியல் கோரிக்கைகள் கவனிப்பாரற்ற நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இரா.சம்பந்தன் இருக்கின்ற வரையில். விமர்சனங்களுக்கு அப்பால் சம்பந்தன் ஒப்பீட்டடிப்படையில் ஓர் அரசியல் தலைவராக ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இருந்தார். ஆனால் சம்பந்தனின் மறைவுக்கு பின்னர், ஆகக் குறைந்தது, ஒரு கூட்டுத் தலைமையைக் கூட, சரிவர ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. இந்த நிலையில் கொழும்புடன் அரசியல் தீர்வு தொடர்பில் பேசுவதற்கான தகுதி நிலையோடு ஈழத் தமிழர் அரசியல் தரப்புக்கள் எவையுமே இல்லை.

தற்போதுள்ள அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அனைவரும் இலங்கையர் என்னுமடிப்படையிலேயே விடயங்களை அணுகி வருகின்றனர். ஒப்பீட்டடிப்படையில் ஆட்சியாளர்கள் தொடர்பான அச்சவுணர்வை சாதாரண மக்கள் மத்தியிலிருந்து அகற்றியிருக்கின்றனர். எந்தவொரு தமிழரும் இப்போது ஆட்சியாளரைப் பார்த்து அச்சம் கொள்ளவில்லை. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ இருந்தபோது. நிலைமை இவ்வாறு இருக்கவில்லை. அரசு தொடர்பில் அச்சம் மேலோங்கியிருந்தது. ஆனால் அநுரகுமாரவை அனைத்து மக்களுமே தங்களுக்கு நெருக்கமானவராக நோக்குகின்றனர்.

இந்த நிலையில் சாதாரண தமிழ் மக்கள் அவர்களை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் மக்களுக்கான தனித்துவமான அரசியலை முன்னெடுப்பது என்பது மிகவும் சவாலான விடயமாக மாறியிருக்கின்றது. வெளித் தரப்புக்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே அவர்களது தலையீடுகள் பெரியளவில் குறைந்து விட்டன. தற்போது நிலைமை மேலும் சிக்கலடைந்துள்ளது.

உண்மையில் இந்த விடயங்களை தூரநோக்குடன் அணுகி, காலப் பொருத்தம் கருதிய விடயங்களை முன்னெடுப்பதற்கான தலைமையொன்று இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறானதொரு தலைமை அண்மைக்காலத்தில் பரிணமிக்கக் கூடிய நிலைமை இல்லை. இன்றுள்ள கட்சிகளால் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும் - ஆளுமைமிக்க தலைவர்களை வெளிக்காட்டும் தகுதியோடு எந்தவொரு கட்சியும் ஈழத் தமிழர் மத்தியில் இல்லை.





## சர்வமத மனிதநேய பேரவை ஏற்பாட்டில் வவுனியாவில் சுதந்திர தின நிகழ்வுகள்

வவுனியா, பெப்.05

வவுனியாவில் மத ஒற்றுமையை வெளிப்படுத்தி 77 ஆவது சுதந்திர தினத்தை அனுஷ்டிப்போம் எனும் தொனிப்பொருளில் வவுனியா மாவட்ட சர்வமத மனிதநேய பேரவையின் ஏற்பாட்டில் சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றன.

வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற இந்த நிகழ்வில் சர்வமத தலைவர்கள் கலந்து கொண்டதோடு பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் இதில் பங்கேற்றனர். (எ-10)

## யாழில் சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளீன் சிறீலங்கா திட்டம் முன்னெடுப்பு





யாழ்ப்பாணம், பெப். 05

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கோட்டையை அண்டிய பிரதேசங்களில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற 'கிளீன் சிறீலங்கா' நிகழ்வில் இலங்கை சாரணர் சங்கத்தின் ஆணையாளர் ஜான்பிரித் பெர்னாண்டோ, 512 ஆவது படைப்பிரிவு கட்டளைத் தளபதி கேணல் எல். ஏ. ஆர். குணரத்ன, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ். மாநகர சபை ஆணையாளர் எஸ். கிருஷ்ணேந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

## முன்பள்ளி கல்வி குறித்து விழிப்புணர்வு கருத்தமர்வு



வவுனியா, பெப்.05

இலங்கை கல்வி அபிவிருத்தி குழுமத்தின் ஏற்பாட்டில் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் முன்பள்ளி கல்வி தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வு நடைபெற்றது.

வவுனியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர் தி. திரேஸ் குமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தமர்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் அ.அற்புதராஜா,

வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. வீரசிங்கம், வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் போல் அமல்ராஜ்,

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த. முகுந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்புரைகளை ஆற்றினர்.

இந்தக் கருத்தமர்வு நிகழ்வில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 300இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 05 புதன்கிழமை
குரோதி வருடம் - தை 23
நல்ல நேரம்:9.00 - 10.30
ராகு காலம்:12.00 -1.30
திதி :அஷ்டமி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். கணுக்கால் வலிக்கும். வளைந்து கொடுத்து செல்ல வேண்டிய நாள்.

**இடபம்**
வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். வாகனத்தை எடுக்கும் முன் எரிபொருள் இருக்கிறதா என பார்த்துக் கொள்ளுங்கள். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

**மிதுனம்**
சபைகளில் மரியாதை கிடைக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மதிப்பு கூடும் நாள்.

**கடகம்**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
இதுவரை இருந்த அலைச்சல், டென்ஷன், கோபம் யாவும் நீங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும். குடும்பத்தில் அமைதி நிலவும். உறவுகள் விரும்பி வந்து பேசுவார்கள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான் கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். மற்றவர்களின் பிரச்னையில் தலையிடுவதால் வீண் பழிச் சொல் ஏற்படும்.

**துலாம்**
ஆடை ஆபரணம் சேரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள்.

**விருட்சிகம்**
வாகன வசதிப் பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உறவினர் நண்பர்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**தனுசு**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.


**மகரம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். பணப் பற்றாக்குறையை சமாளிப்பீர்கள்.

**கும்பம்**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

# யாழில் சுதந்திர தின நிகழ்வுகள்





யாழ்ப்பாணம், பெப்.05

இலங்கையின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் அனைத்து மாவட்ட செயலங்களிலும் நேற்று நடைபெற்றன.

அந்த வகையில் யாழ். மாவட்ட செயலகத்தின் முன்றலில் “தேசிய மறு மலர்ச்சிக்காக அணிதிரள்வோம்” என்னும் கருப்பொருளில் சுதந்திரதின நிகழ்வுகள் நடைபெற்றன.

அணிவகுப்பு மரியாதை முன்னே செல்ல, மாவட்ட அரசாங்க அதிபர், பதவிநிலை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், இராணுவம், பொலிஸ், கடற்படை, விமான படை அதிகாரிகள், பொதுமக்கள் மாவட்ட செயலக முன்றலுக்கு அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் காலை 08.10 மணியளவில் தேசியக் கொடியை அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் பாடப்பட்டு, பின்னர் மாவட்ட செயல கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி ஆற்றிய சுதந்திரதின செய்தி காணொலி மூலமாக ஒளிபரப்பப்பட்டது.

இதில், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ்ப்பாணம் மாவட்ட முப்படைகளின் கட்டளை தளபதிகள், பதவிநிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், சாரண மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-05)

# யாழ். கோப்பாயில் தேசிய மக்கள் சக்தி மக்கள் தொடர்பாடல் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.05

தேசிய மக்கள் சக்தியின் பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கோப்பாய் வீதியில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், எஸ்.சிறீபவானந்தராஜா, ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், கட்சி உறுப்பினர்கள், செயல்பாட்டாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட




பலரும் கலந்து கொண்டனர். மக்களின் நலன் கருதி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (எ)

# 50 போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இளைஞன் கைது

வவுனியா, பெப்.05

வவுனியா - பெரியார்குளம் பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான குழுவினர் வவுனியா, பெரியார்குளம் பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது 50 போதை மாத்திரைகள் இளைஞன் ஒருவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டது.இதனையடுத்து வவுனியா பெரியார்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞன் கைது செய்யப்பட்டதோடு, மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த இளைஞனை நீதி



மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-10)

# மைதானத்தில் இளைஞன்மீது தாக்குதல் வெற்றிக்கிண்ணத்தை உடைத்து ரகளை

வவுனியா, பெப்.05

வவுனியா, தவசிகுளம் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் வைத்து இளைஞன் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையால் அவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தவசிகுளம் பகுதியில் இரண்டு அணிகளுக்கு இடையில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இதன்போது, குறித்த மைதானத்துக்குள் வந்த சிலர் விளையாட்டில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதுடன், வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் கதிரைகளையும் உடைத்து ரகளையில் ஈடுபட்டனர்.

இதேவேளை, காயமடைந்த இளைஞன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவரிடம் பெறப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் நடைபெற்று வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் மக்கள் ஆதரவு தற்காலிகமான ஒன்றே!

## சுட்டிக்காட்டுகிறார் பேராசிரியர் தேவசிறி

கொழும்பு, பெப். 05

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மக்கள் ஆதரவு, வாக்குப்பலம் மிகவும் தற்காலிகமான ஒன்று என பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.**

இந்த நிச்சயமற்றவாக் குபலத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்தது போன்றே, ஜனாதிபதி அநுர குமாரவும் பிள்ளைகளை தூக்கிக் கொஞ்சுதல், பெரியவர்களை கட்டியணைத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் இவ்வாறு செய்வதினால் மட்டும் ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள முடியாது. இவ்வாறான செயற்பாடுகளினால் தற்காலிகமாக மக்களின் ஆதரவு பெற்றுக் கொள்ள முடியும்.



ஆனால் மக்களின் வயிறு மற்றும் அவர்களின் சட்டைப்பை என்பனவற்றை கருத்தில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்படாவிட்டால் மக்களின் ஆதரவினை பெறுவதில் சவால்கள் ஏற்படும் என பேரா சிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# உப்பு இறக்குமதி செய்வதற்கு தனியார் துறைக்கு அனுமதி!

கொழும்பு, பெப். 05

சந்தையில் பற்றாக்குறையாக உள்ள உப்பை இறக்குமதி செய்யத் தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உப்பு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகக் கடந்த டிசெம்பர் மாதம் 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அதன்படி, ஜனவரி 31 ஆம் திகதி வரை அரச துறைக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கிய நிலையில், பெப்ரவரி 28 ஆம் திகதி வரை குறித்த கால அவகாசம் நீடிக்கப்பட்டது.

இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, உப்பு உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் தலைமையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இதன்படி, இதுவரை அரச துறைக்கு மட்டுமே உப்பு இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும், நேற்று முதல் தனியார் துறைக்கும் உப்பு இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்தார்.

உப்பின் விலை அதி ரிக்க வாய்ப்புள்ளதாக அந்த சங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும், சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக உப்பு விலை அதிகரித்திருந்தாலும், இறக்குமதி காரணமாகச் சந்தையில் உப்பு விலையில் அதிகரிப்பு ஏற்படாது என இலங்கை உப்பு உற்பத்தி யாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்தார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் 19 கடவுச்சீட்டுகளுடன் சிக்கிய பயணி

கொழும்பு, பெப். 05

வெளிநாட்டு விமானப் பயணி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் 19 இலங்கை கடவுச்சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

வரி செலுத்தாமல் நாட்டுக்கு கொண்டு வந்த சுமார் 2.5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள 88 விஸ்கிப் போத்தல்களுடன் அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரான வெளிநாட்டவர் அதிகாரிகளுக்கு தெரியாமல் விஸ்கி போத்தல்களை விமான நிலையத்திலிருந்து கொண்டு செல்ல முயற்சித்துள்ளார்.

எனினும் விமான நிலைய குற்றப் புலனாய்வுத் துறையின் அதிகாரிகள் குழுவினால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

42 வயதான குறித்த நபர் இந்தியாவின் சென்னையில் வசிப்பவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் பெங்களூரிலிருந்து சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

சந்தேக நபரின் பொதியை சோதனையிட்டபோது 19 இலங்கை கடவுச்சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் இந்திய நாட்டவர், விஸ்கி போத்தல் மற்றும் இலங்கை கடவுச்சீட்டுகளுடன் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவரை அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# குற்றச் செயல்களை ஒழுங்குபடுத்தும் 68 பேருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 05

வெளிநாட்டில் தலைமறைவாகி நாட்டில் திட்டமிட்ட குற்றச் செயல்களை ஒழுங்குபடுத்தும் 68 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராக சர்வதேச சிவப்பு எச்சரிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மானதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 5 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன்போது 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

அதேபோன்று இதர காரணங்களால் மேலும் 6 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எவ்வாறாயினும் இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய பொலிஸார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

அண்மையில் கல்கிஸைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் அதற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியும் மீட்கப்பட்டிருந்தது.

மன்னார் மேல் நீதிமன்றத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தக்குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 20 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஒரு கைத்துப்பாக்கி, 3 ரி-56 ரக துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் வெளிநாட்டில் தலைமறைவாகி நாட்டில் திட்டமிட்ட குற்றச் செயல்களை ஒழுங்குபடுத்தும் 68 பேரை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

அதன்படி டுபாயில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் எமக்கு அறிவித்துள்ளனர்.

எனவே குறித்த சந்தேக நபர்களை நாட்டுக்கு அழைத்து வந்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்- என்றார். (அ)

# கொள்ளுப்பிட்டி விடுதியில் இருந்த மற்றுமொரு பெண்ணும் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 05

கொள்ளுப்பிட்டியில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த போது சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மற்றுமொரு பெண்ணும் உயிரிழந்தார்.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த 27 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாட்டுக்குப் பிரவேசித்த மூன்று வெளிநாட்டவர்கள் கொள்ளுப்பிட்டி ஆர்.ஏ. டி மெல் வீதியில் உள்ள விடுதியொன்றில் கடந்த 30 ஆம் திகதி முதல் தங்கியுள்ளனர்.

அவர்களில் 30 வயதுடைய ஜேர்மன் பிரஜை ஒருவரும், 27 வயதுடைய அவரது மனைவியும் 24 வயதுடைய பிரித்தானியப் பெண் ஒருவரும் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வெளிநாட்டவர்கள் மூவரும் அந்த விடுதியின் 3 ஆவது மாடியில் உள்ள அறையொன்றில் தங்கியிருந்த நிலையில், கடந்த 31 ஆம் திகதி அவர்களுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

அவர்களின் உடல் நிலைமை மோசமடைந்ததை அடுத்து சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், 24 வயதுடைய பிரித்தானியப் பெண் உயிரிழந்தார்.

அவரது சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் தம்பதியினர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மற்றுமொரு பெண் நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

இதனிடையே குறித்த வெளிநாட்டவர்கள் தங்கியிருந்த அறைக்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் சென்று விசாரணைகளை முன்னெடுத்ததுடன், குறித்த அறைமுத்திரையிடப்பட்டுள்ளது.

அந்த அறைக்குப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒருவகையான வாயு விசிறப்பட்டுள்ளது.

குறித்த வாயுவைப் பயன்படுத்திய பிறகு, அந்த அறை 72 மணி நேரம் மூடப்பட்டிருக்கவேண்டும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, உரிய முறையில் விடுதி ஊழியர்கள் நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும், குறித்த மூன்று வெளிநாட்டவர்களும் அந்த வாயுவைச் சுவாசித்ததன் விளைவாக நோய்வாய்ப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துக்கான சரியான காரணம் வெளியாகாத நிலையில், உணவு விஷமான தால் மரணம் ஏற்பட்டதா என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, மூன்று வெளிநாட்டவர்களும் உணவருந்திய உணவகத்தையும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சோதனைக் குட்படுத்தியுள்ளனர். (அ)

# தென் கொரியத் தூதுவருடன் கடற்படைத் தளபதி சந்திப்பு



கொழும்பு, பெப். 05

இலங்கைக்கான தென் கொரிய தூதுவர் மியோன் லீ மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொடவுக்குமிடையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கடற்படைத் தலைமையகத்தில் அதிகாரபூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது, இலங்கைக்கான தென் கொரிய தூதுவர் மியோன் லீ, 26ஆவது கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொடவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மேலும்,இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகள் குறித்து நட்புரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக் கூறுவதை தவிர்க்கும் அரசு எதற்கு?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, பெப். 05

**நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் நாம் என்ன செய்வது என்று அமைச்சர்கள் கேட்பார்களாயின், அவ்வாறான அமைச்சர்களைக் கொண்ட அரசாங்கம் எதற்கு? போராட்டத்தில் ஈடுபடும் போது அவர்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. கடந்த அரசாங்கங்களுக்கு எதிராக சகல தொழிற்சங்கங்களையும் வீதிக்கிறக்கி போராடிய இந்த அரசாங்கம் தற்போது போராட்டங்களை முடக்க முற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.**



கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-இதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்கள் ஓரளவேனும் வழங்கிய வாக்கு றுதிகளை நிறைவேற்றியுள்ளன. ஆனால் இந்த அரசாங்கம் எந்த வொரு வாக்குறுதியையும் வழங்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

செல்லப்பிராணிகளுக்கு அதிக உணவு வழங்கப்பட்டால், மக்கள் அதிகளவில் தேங்காய்களை உபயோகித்தால், துறைமுகங்களில் கொள்கலன்கள் தேங்கினால் நாம் என்ன செய்வது என்று அரசாங்கம் கேள்வியெழுப்புகிறது.

அவ்வாறெனில் இந்த நாட்டுக்கு அரசாங்கம் என்ற ஒன்று எதற்கு? அரசாங்கம் பொறுப்பேற்று 4 மாதங்கள் நிறைவடைவதற்குள் 6 அரச நிறுவனத் தலைவர்கள் பதவி விலகி விட்டனர்.

மறுபுறம் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் அரசாங்கம் தோல்வியைத் தழுவியுள்ளது. இந்நிலையில் விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் இடம்பெறவுள்ளது.

அதனை மையமாகக் கொண்டு அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் கோபத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால் எவ்வித பரிசோதனைகளும் இன்றி விடுவிக்கப்பட்ட அதிக அபாயம் மிக்க கொள்கலன்கள் தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து எந்த அறிவிப்பும் இல்லை.

விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடும் போது அவர்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. கடந்த அரசாங்கங்களுக்கு எதிராக சகல தொழிற்சங்கங்களையும் வீதிக்கிறக்கி போராடிய இந்த அரசாங்கம் தற்போது போராட்டங்களை முடக்க முற்படுகின்றது-என்றார். (அ)

# 2025 இல் இதுவரையில் 11 துப்பாக்கிச்சூடுகள்!

## 20 பேர் கைது

கொழும்பு, பெப். 05

நாட்டில் 2025 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 11 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும், இவை தொடர்பில் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களால் ஐந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், தனிப்பட்ட மற்றும் இதரகாரணங்களால் 6 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். இருவர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி இரு சம்பவங்கள் தொடர்பிலும் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள பாதாளகுழு உறுப்பினர்கள் 68 பேருக்கு எதிராக சிவப்பு பிடிவிராந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் மூன்று பேர் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளனர் என எமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாரத்துக்குள் அவர்களை நாட்டுக்கு அழைத்துவந்து, உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# வாக்குச்சீட்டை மாற்றுமாறு இ.தொ.கவினர் கோரிக்கை

கொழும்பு, பெப். 05

நிராகரிக்கப்படும் வாக்கு எண்ணிக்கை குறைப்பதற்கு வாக்குச்சீட்டின் மாதிரியை மாற்றுக் கோரி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

வாக்குச் சீட்டின் மாதிரியில் மாற்றத்தை ஏற்படுத்தி நிராகரிக்கப்படுகின்ற வாக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்துள்ள ஆலோசனை கரிசனையோடு கவனத்தில் கொள்ளப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தலில் நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சிபாரிசுகளை முன் வைத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் தேசிய தேர்தல் ஆணைக்குழுத் தலைவருக்கும் இடையில் நேற்று முன்தினம் ராஜகிரியில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழு தலைமை அலுவலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் போது மலையக மாவட்டங்களில் பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தலின் போது நிராகரிக்கப்படுகின்ற வாக்குகளின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகிறது.

வாக்காளர்கள் தமது எண்ணங்களைச் சரியாக வெளிப்படுத்த முடியாததற்கு, வாக்குச் சீட்டின் வடிவமைப்பே முக்கிய காரணமாக இருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸினர் தெரிவிக்கின்றனர். நிராகரிக்கப்படும் வாக்குகளின் காரணமாக, தாம் விரும்பும் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய முடியாத நிலைக்கு வாக்காளர்கள் தள்ளப்படுவதாக அவர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தல்களில், சுயேச்சைக் குழுக்களுக்கும் வேட்பாளர்களுக்கும் இலக்கங்கள் வழங்கப்படுகின்றன. ஒரே மாதிரியான இலக்கங்கள் இரண்டு இடங்களில் இடம் பெறுவதால், வாக்காளர்கள் குழப்பமடையும் நிலை உருவாகிறது.

இதன் காரணமாக, அவர்கள் விருப்பு வாக்கு இலக்கங்களுக்கு பதிலாக, சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட இலக்கத்தின் மேல் புள்ளடி இடுகின்றனர். இதனால், குறிப்பிட்ட வாக்குகள் நிராகரிக்கப்படும் நிலை ஏற்படுகின்ற தாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான தீர்வாக, வாக்குச் சீட்டின் வடிவமைப்பில் மாற்றம் செய்து, வாக்காளர்களுக்குப் புரிந்துகொள்ள எளிதாக மாற்ற வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக, சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கும் இலக்கத்தை எழுத்து வடிவிலும், வேட்பாளர்களுக்கு வழங்கும் இலக்கத்தை எண் வடிவிலும் மாற்றியமைக்குமாறு அவர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், இந்த விடயம் குறித்துத் தேர்தல் ஆணைக்குழு கலந்துரையாடி இருப்பதாகவும், ஏற்கனவே தேர்தல் தொடர்பாக பல்வேறு திருத்தங்களை மேற்கொள்ளும் படி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். அதனுடன், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் ஆலோசனைகளும் இணைக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

எனினும், இது அரசியல் யாப்புடன் தொடர்புடைய விடயமாக இருப்பதால், இதற்கான திருத்தங்கள் பாராளுமன்றத்தின் ஊடாகவே மேற் கொள்ள வேண்டும். இது தொடர்பாக, பொறுப்பான அமைச்சருக்கு அறிவித்து, அதன்படி தீர்வு பெற்றுக்கொடுக்க ஆணைக்குழுவின் தரப்பு சிபாரிசுகளை முன்வைக்கும் எனவும் தேர்தல் ஆணைக்குழு வின் தலைவர் தெரிவித்தார். (அ)

# செலவினங்கள் சமர்ப்பிக்காத 13 வேட்பாளர்கள் மீது வழக்கு!

கொழும்பு, பெப். 05

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளைக் கையளிக்காத 13 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க இதனை கூறினார்.

இதில் 3 அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும், 10 சுயேச்சை குழுக்களின் வேட்பாளர்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேநேரம், பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர்களில் 1064 பேர் வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளைக் கையளிக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# இரும்புக் கம்பியினால் தாக்கி ஒருவர் கொலை!

கொழும்பு, பெப். 05

மாதம்பே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொஹோம்பவத்த ஜனபதய பிரதேசத்தில் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் புத்தளம், காக்கப்பல்லிய பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயது டையவர் ஆவார்.

சம்பவத்தன்று, கொலை செய்யப்பட்டவருக்கும் அயல் வீட்டாருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின்போது கொலை செய்யப்பட்டவர் அயல் வீட்டாரை இரும்புக் கம்பியால் தாக்க முயன்றுள்ளார்.

இதன்போது அயல் வீட்டார், கொலை செய்யப்பட்டவரின் கையிலிருந்த இரும்புக் கம்பியை எடுத்து அவரை பலமாக தாக்கியுள்ளார்.

காயமடைந்தவர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மனித பாவனைக்கு ஒவ்வாத நிலையில் 1,623 மெற்றிக் தொன் உணவுப் பொருள்!

கொழும்பு, பெப். 05

உணவு திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வெயாங்கொடை களஞ்சியசாலைகளில் உள்ள 1,623 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் மனித பாவனைக்கு ஒவ்வாதவை எனச் சுகாதார திணைக்களம் சான்றளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உணவு ஆணையாளர் உபுல் சாந்த டி அல்விஸ் இதனைத் தெரிவித்தார்.

இந்த உணவுப் பொருட்கள் உலக உணவு வேலைத்திட்டத்தினால் வழங்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இதன்படி அந்த பொருட்கள் தொடர்பில் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் உலக உணவு வேலைத்திட்டம் ஆகியவற்றால் வழங்கப்படும் ஆலோசனைக்கமைய அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு ஆணையாளர் உபுல் சாந்த டி அல்விஸ் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் கொள்வனவு செய்ய தேவையான நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, பெப். 05

பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அதன்படி, நெல் சந்தைப்படுத்தல் சபை நெல் கொள்முதல் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அமைச்சர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் அரிசி மாபியாவைக் கட்டுப்படுத்த முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இன்று முதல் ஒரு வாரத்திற்குள் உத்தரவாத விலை தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால் அதில் பெரும்பகுதி விவசாயிகளின் பக்கம் உள்ளது. நான் அரசாங்கத்தில் இருப்பதால் இதைச் சொல்லவில்லை.

விவசாயி மற் றும் நுகர்வோர் இருவரையும் பாதுகாக்கும் நிலைப்பாட்டை எடுத்த முதல் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி கட்சி அரசாங்கமாகும். பணத்தை விடுவிப்பதற்கு ஒரு செயல்முறை உள்ளது. பணம் விடுவிக்கப்பட்டுள்ளது, இப்பொழுது நீங்கள் நெல்லை வாங்கலாம் -என்றார். (அ)

# முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை!

## பதில் பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 05

**பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகளை வழங்குவதற்காக வரும் தரப்பினரின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.**



பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி, ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கவும் முடியும் என பதில் பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்கு வரும் தரப்பினரின் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை எனவும் முறைப்பாடுகள் நிராகரிக்கப்படுவதாகவும் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் ஏனைய அதிகாரிகளும் பல்வேறு உண்மைகளை முன்வைத்து இவ்வாறு நிராகரிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் பதில் பொலிஸ் மா அதிபர் தனது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்படும் முறைப்பாடுகளை பதிவு செய்து விசாரணை செய்வது பொலிஸ் அதிகாரிகளின் கடமையும் பொறுப்பு.

இதன்படி, இனிமேல் பொலிஸ் நிலையங்களில் கிடைக்கப்பெறும் எந்தவொரு முறைப்பாட்டையும் ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்டத்துக்கு ஜப்பான் 565 மில்லியன் ரூபா அன்பளிப்பு!

கொழும்பு, பெப். 05

'கிளீன் சிறிலங்கா' திட்டத்தின் கீழ், இலங்கையின் கழிவு முகாமைத்துவ கட்மைப்பின் திறனை அதிகரிக்க ஜப்பான் 300 மில்லியன் யென் (565 மில்லியன் ரூபா) அன்பளிப்பை வழங்கியுள்ளது.



இதற்கமைவான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்னிலையில் நேற்று முன் தினம் ஜப்பான் வெளிநாட்டு அலுவல்கள் பாராளுமன்ற பிரதி அமைச்சர் சயமா அகிகோ மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன ஆகியோரால் கைசாத்திடப்பட்டது.

இந்த அன்பளிப்பின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் கழிவு முகாமைத்துவத் திறனை மேம்படுத்துவதற்காக கழிவுப் போக்குவரத்துக்காக 28 கம்பெக்டர் வாகனங்கள் வழங்கப்படும், அதில் 14 வாகனங்கள் மேல் மாகாணத்துக்கும், 08 வாகனங்கள் கிழக்கு மாகாணத்துக்கும், 06 வாகனங்கள் வடக்கு மாகாணத்துக்கும் வழங்கப்படும்.

தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் காரணமாக உலக நாடுகளின் முதலீடுகள் இலங்கையை நோக்கி வருகின்றதென சுட்டிக்காட்டிய, ஜப்பானின் வெளிநாட்டு அலுவல்கள் தொடர்பிலான பாராளுமன்ற பிரதி அமைச்சர் சயமா அகிகோ,தெரிவித்தார். அரசாங்கம் முன்னெடுக்கும் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

ஜப்பானிய பிரதமரின் வாழ்த்துச் செய்தியையும், பிரதி அமைச்சர் இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வழங்கினார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடை யிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்த ஜப்பானிய அரசாங்கம் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நன்றி தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டம் எவ்வித பாதிப்பும் இன்றி தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும் என வலியுறுத்திய ஜனாதிபதி, ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பித்தமைக்காகவும், கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டில் வழங்கிய ஆதரவிற்கும் ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், அதிகளவான இலங்கைத் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கிய ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, அந்த வாய்ப்புகளை மேலும் அதிகரித்துக்கொள்ள ஒத்தழைப்பு வழங்குமாறும், இலங்கையின் பொதுப் போக்குவரத்தை மேம்படுத்தும் உதவித் திட்டத்தை நடைமுறைப் படுத்த தலையீடு செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். (அ)

# குறைக்கப்பட்ட இராணுவ அணிவகுப்பு!

கொழும்பு, பெப். 05

இந்த ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் ஈடுபடுத்தப்பட்ட முப்படை வீரர்களின் எண்ணிக்கை 40 வீதம் குறைக்கப்பட்டது. மேலும் வீரர்களின் கவச வாகனங்கள் சேர்க்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

77ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள் நேற்று சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றன.

அணிவகுப்பில் பங்கேற்ற மொத்த இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 1,873 ஆக இருந்தது.இம்முறை சிறப்பு நிகழ்வுகளாக விமானப்படையின் மூன்று விமானங்கள் மற்றும் இலங்கை கடற்படையினரால் ஒரு கப்பலில் இருந்து 25 துப்பாக்கி வணக்கமும் செலுத்தப் பட்டது.

இதனை தொடர்ந்து பாதுகாப்பிக்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் நியமிக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடக பேச்சாளர் எஸ்.எஸ்.பி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

77ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்களை பொது மக்கள் பார்வையிட அரசாங்கம் முடிவு செய்ததைத் தொடர்ந்து நேற்று மக்கள் சோதனை செய்யப்பட்ட பின்னர் சுதந்திர தின கொண்டாட்டத்துக்கு அனுமதிக்கப்பட் டார்கள். (அ)

# நாட்டில் முதல் முறையாக குரங்குகள் கணக்கெடுப்பு

கொழும்பு, பெப். 05

நாட்டில் முதல் முறையாக குரங்குகள் கணக்கெடுப்பை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது.அனைத்து மாவட்டங்களிலும் இம்மாதம் 15 அல்லது 22 ஆம் திகதிகளில் குரங்குகள் கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக என்று தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த ஆண்டு குரங்களினால் இலட்சக்கணக்கான தேங்காய்கள் அழித்து நாசமாக்கப்பட்டமையினால் நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், அவரசரமாக கணக்கெடுப்பு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களம் உட்பட பல அரசாங்க நிறுவனங்கள் கணக்கெடுப்புக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளன.

இந்த கணக்கெடுப்பில் துல்லியமான தரவுகளை சேகரிப்பதனால் குரங்குகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும், தென்னைப் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கும் வாய்ப்பாக அமையும்-என்றார். (அ)

# பத்து இலட்சம் ரூபா பெறுமதியான வலம்புரி சங்குகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 05

10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகளவான பெறுமதி கொண்ட 10 வலம்புரிச் சங்குகளை தனது காரில் மறைத்து வைத்து விற்பனை செய்வதற்கு எடுத்துச் சென்ற நபரொருவரை கணேமுல்ல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹோமாகம பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அடையாளம் தெரியாத ஒருவர் இந்த வலம்புரிகளை தனக்கு எடுத்துச் சென்று விற்கச் சொன்னதாகவும், அந்தக் கோரிக்கையின் பேரில் அவற்றை விற்கக் கொண்டு சென்றதாகவும் சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

சந்தேகநபர் பயணித்த காரும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட வுள்ளார். (அ)

# ஆறு இலட்சம் ரூபாவினால் அதிகரிக்கும் ஓட்டோ விலை!

கொழும்பு, பெப். 05

புதிய வரி திருத்திற்கமைய, ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டியேற்படும் என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிலோன் மோட்டர் டிரேடர்ஸ் ஒழுங்கமைப்பின் தலைவர் அன்று பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி 3 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று இறக்குமதி தடை தளர்த்தப்பட்டதுடன் விதிக்கப்பட்ட வரி காரணமாக 7 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல் குறித்து விசாரித்த இளைஞர்கள்மீது வாள்வெட்டு

## இனந்தெரியாத நபர்கள் வெறிச்செயல்

திருகோணமலை, பெப்.05

**கிண்ணியா பெரியாற்றுமுனை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாத நபர்களால் இரண்டு இளைஞர்கள் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், படுகாயமடைந்த குறித்த இளைஞர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்கான இரு இளைஞர்களும் தமது குடும்ப உறவினர் ஒருவர் சில இளைஞர்களால் ஏற்கனவே தாக்கப்பட்டிருந்ததால் அந்தத் தாக்குதல் சம்பந்தமாக விசாரிக்க சென்ற வேளை இவ்வாறு வாள்வெட்டு தாக்குதல் இடம்பெற்றதாக படுகாயமடைந்த இளைஞர்களில் ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்த இளைஞர்களில் ஒருவர் கிண்ணியா தள மருத்துவமனையிலும் மற்றொருவர் திருகோணமலை பொது மருத்துவமனைக்கும் மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம் பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிண் ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சுதந்திர தின நிகழ்வுகள்






திருகோணமலை, பெப்.05

இலங்கையின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரிய சஞ்சனவால் தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டது. (எ)

# இலவச மருத்துவ முகாம்



திருகோணமலை, பெப்.05

77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மூதூரில் இலவச மருத்துவ முகாம் நேற்றுக் காலை 08: 00 மணியளவில் நடைபெற்றது.

மூதூர் பெரிய பள்ளிவாயல் முகைதீன் ஜும்மா பள்ளிவாயல் நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாமில் மூதூர், தோப்பூர் முதலான பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தமது நோய்க்கான மருத்துவ தேவைகளை பெற்றுக் கொண்டனர்.

நீண்ட காலமாக மருத்துவ தேவைகளைப் பெறாமல் இருந்த மக்கள் இதன் மூலம் சேவையை பெற்றுக் கொண்ட தோடு அவர்களுக்கான ஆலோ சனைகளும் வழங்கப்பட்டன. (எ)

# ஐஸ் போதையுடன் ஒருவர் சிக்கினார்

திருக்கோவில், பெப்.05

ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய 44 வயது நபரை திருக்கோவில் விசேட அதிரடிப்படையினர் கைது செய்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதான நபர் வசமிருந்து ஒரு கிராம் 280 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான 22 வயது இளைஞனிடம் விசாரணை

கல்முனை, பெப்.05

கல்முனை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட 22 வயது இளைஞனிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்து வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் ஐஸ் போதைப் பொருளுடன் குறித்த இளைஞன் கைதானார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை பள்ளிவாசல் வீதி அருகில் வைத்து இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் சட்டநடவடிக்கைக்காக கல்முனை தலைமைய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)

# 26 வயது இளைஞன் கஞ்சாவுடன் கைது

கல்முனை, பெப்.05

கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த 22 வயது இளைஞனை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அலியார் வீதி பகுதியில் இடம்பெற்றது.

அண்மைக்காலமாக கேரளக் கஞ்சா விற்பனை செய்யப்பட்டு வருவதாக கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டார். (எ)


# மட்டு. சிறையிலிருந்து 16 கைதிகள் விடுதலை

மட்டக்களப்பு, பெப்.05

77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய மட்டக்களப்பு சிறையிலிருந்து 16 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறுகுற்றங்கள் புரிந்ததன் அடிப்படையில் தண்டனை பெற்றுவந்த கைதிகள் 16 பேர் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார். (எ)







கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்த 77ஆவது சுதந்திர தின விழா நேற்று நடைபெற்றது. கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம். ராபி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் குண்டுவெடிப்பில் சிரியாவில் 20 பேர் பலி

டமாஸ்கஸ், பெப்.05

**சிரியாவில் இடம்பெற்ற கார் குண்டுவெடிப்பில் சிக்கி 20 பேர் பலியாகினர். 5 பேர் படுகாயமடைந்தனர்.**



சிரியாவின் வடக்கு பகுதியில் உள்ள மன்பிஜ் நகரில் நேற்று முன்தினம் மதியம் விவசாய தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு வாகனம் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அந்த வாகனத்தின் அருகே நின்றுகொண்டிருந்த வெடிகுண்டு நிரப்பப்பட்ட கார் திடீரென வெடித்து சிதறியது.

இந்தச் சம்பவத்தில் 20 பேர் உயிரிழந்த நிலையில் மேலும் 5இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். (எ)

# மெக்சிக்கோ மீதான வரிவிதிப்பு நிறுத்தம்

## ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், பெப்.05

மெக்சிக்கோ மீதான 25 சதவீத வரிவிதிப்பை ஒருமாத காலம் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மெக்சிக்கோ மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25 சதவீதமும், சீனப் பொருட்களுக்கு 10 சதவீதமும் வரி விதிப்பு பெப்ரவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார். மெக்சிக்கோவும் கனடாவும் புலம்பெயர்வை தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என்று தெரிவித்திருந்தார்.


இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கப் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்துள்ளார். இதே போன்று மெக்சிக்கோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் அமெரிக்காவின் வரிவிதிப்புகளுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து, மெக்சிக்கோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் உடன் தொலைபேசி வாயிலாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் இது குறித்து பதிவிட்டுள்ள ட்ரம்ப், "அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் உடனடியாக 10, 000 படையினரை நிறுத்துவதற்கு கிளாடியா ஒப்புக் கொண்டுள்ளார். இந்த படையினர் எங்கள் நாட்டில் சட்டவிரோதமாக நுழையும் குடியேறிகளை தடுத்து நிறுத்துவார்கள்.

மேலும், 25 சதவீத வரிவிதிப்பை தற்காலிக மாக ஒரு மாதகாலம் நிறுத்தி வைப்பது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். இரு நாடுகளுக்கும் இடையே ஓர் 'ஒப்பந்தம்' நிறைவேறும் வரையில் பேச்சுவார்த்தை தொடரும்"- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# இறக்கை தீப்பிடித்ததால் தரையிறங்கிய விமானம்

## அமெரிக்காவில் தொடரும் விபத்துகள்



வாஷிங்டன், பெப்.05

அமெரிக்காவில் இறக்கை தீப்பிடித்ததால் விமானம் ஒன்று அவசரமாக தரையிறங்கியது. விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்

அமெரிக்காவின் ஹூஸ்டன் விமான நிலையத்தில் இருந்து நியூயோர்க்குக்கு விமானம் ஒன்று புறப்பட்டது. அமெரிக்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான அந்த விமானத்தில் 5 பணியாளர்கள் உட்பட 109 பேர் பயணித்தனர். ஹூஸ்டன் விமான நிலைய ஓடுதளத்தில் இருந்து மேலே எழும்பியபோது அந்த விமானத்தின் ஓர் இறக்கை திடீரென தீப்பிடித்தது. இதனைப் பார்த்த பயணிகள் பயத்தில் சுத்தி கூச்சலிட்டனர்.

இதனையடுத்து அந்த விமானம் ஹூஸ்டன் விமான நிலையத்தில் உடனடியாக தரையிறக்கப்பட்டது. பின்னர் அங்கு தயாராக இருந்த தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர். மற்றொருபுறம் விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த சம்பவத்தால் அங்கு சிறிதுநேரம் பரபரப்பு நிலவியது. அமெரிக்காவில் விமான விபத்துகள் அதிகரித்து வருகின்றமை மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.(எ)

# ஆப்கானில் நிலநடுக்கம்

காபுல், பெப்.05

ஆப்கானிஸ்தானில் 4. 1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் 02. 58 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக, கடந்த 30ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் 4. 2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.(எ)

# படையினரின் தாக்குதலில் பயங்கரவாதிகள் நால்வர் பலி!



லாகூர், பெப்.05

பாகிஸ்தானில் பாதுகாப்புப் படையினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் 4 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாதுகாப்புப் படையினர் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் 18 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து, நாடு முழுவதும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.இந்த நிலையில், அந்த நாட்டின் கைபர் பக்துவா மாகாணம் டிரா இஸ்மாயில் கான் மாவட்டம் குலசி பகுதியில் படையினர் நேற்று முன்தினம் மாலை அதிரடித் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது, நடந்த மோதலில் 4 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். (எ)

# இந்தியர்களை வெளியேற்ற ஆரம்பித்தது அமெரிக்கா

வாஷிங்டன், பெப்.05

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இந்தியர்களை நாடு கடத்தும் நடவடிக்கையை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை ஏற்றிக் கொண்டு அந்த நாட்டு இராணுவ விமானம் ஒன்று இந்தியா புறப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், அந்த விமானம் எப்போது அமெரிக்காவில் இருந்து புறப்பட்டது.

எப்போது இந்தியா வந்து சேரும் என்ற தகவல்கள் ஏதும் இல்லை. இந்த நிலையில், இது தொடர்பில் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் கூறுகையில், "சி - 17 விமானம் ஒன்று சட்டவிரோதமாக குடியேறியவர்களுடன் இந்தியா சென்றுள்ளது"- என்றார். 205 பேர் அந்த விமானத்தில் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் சுமார் 7 இலட்சத்து 25 ஆயிரம் இந்தியர்கள் சட்ட விரோதமாக வசிப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. (எ)

# "சுதந்திரம் இல்லாமல் வாழ்க்கை அர்த்தமற்றது"

காஸா, பெப்.05

சுதந்திரம் இல்லாமல் எனது வாழ்க்கை அர்த்தமற்றது. எங்களின் சுதந்திரத்தை பறித்த உலகம் அதனை மீளப் பெற்றுத்தர வேண்டும் என்று இஸ்ரேல் சிறையிலிருந்து விடுதலையான பலஸ்தீனியர் ஒருவர் தெரிவித்தார்.

உலகம் பலஸ்தீனியர்களை புறக்கணித்துள்ளது. அலட்சியம் செய்துள்ளது என்றும் தனது சுதந்திரம் பறிபோனதற்கு பிரிட்டனும் காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜகைரியா ஜூபைதி என்பவரே இவ்வாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து இஸ்ரேல் நீதிமன்றம் இவருக்கு சிறைத் தண்டனை விதித்திருந்தது.

இஸ்ரேல்-ஹமாஸ்இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இவர் விடுதலை செய்யப்பட் டுள்ளார். (எ)

# மலேரியா தடுப்பூசிகளை உருவாக்கும் பணி நிறுத்தம்

## ட்ரம்பின் உத்தரவால் ஆபத்து

லண்டன், பெப்.05

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சர்வதேச உதவிகளை இடைநிறுத்தியதால் மலேரியா தடுப்பூசிகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் சர்வதேச அளவில் இடம்பெற்றுவந்த மருத்துவ சுகாதார ஆராய்ச்சிகள் பாதிக்கப்பட்டுள்ளமைக்கு இது ஓர் உதாரணம் என கார்டியன்தெரிவித்துள்ளது.

தடுப்பு மருந்துகளை உருவாக்கும் திட்டத்தை இடைநடுவில் கைவிட்டால் எயிட்ஸ் போன்ற நோய்கள் பரவும் ஆபத்து அதிகரிக்கும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.



இதுவரை காலமும் மருத்துவத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பாதிக்கப்படலாம் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

ஆபிரிக்காவின் சகாரா பகுதிகளில் வருடாந்தம் ஐந்து வயதுக்கு உட்பட்ட ஐந்து இலட்சம் குழந்தைகள் மலேரியாவால் உயிரிழக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொன்டி ரோட்ஸ் இலங்கை வருகை

கொழும்பு, பெப்.05

தென்னாபிரிக்காவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ஜொன்டி ரோட்ஸ் மூன்று நாள் பயணமாக நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இலங்கையில் ஒரு விசேட திட்டத்தை செயல்படுத்த வந்ததாகவும், அது குறித்த விவரங்களை பின்னர் வெளியிடுவேன் என்றும் விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்கு ஜொன்டி ரோட்ஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை 05. 25 மணிக்கு இந்தியாவின் மும்பையிலிருந்து சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஜொன்டி ரோட்ஸுக்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. (எ)



# சம்பியனானார் பிரக்ஞானந்தா

ஆம்ஸ்டர்டாம், பெப்.05

டாடா ஸ்டீல் மாஸ்டர் செஸ் தொடரில் குகேஷை வீழ்த்தி பிரக்ஞானந்தா சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நெதர்லாந்தின் விக் ஆன் ஜீ நகரில் டாடா ஸ்டீல் மாஸ்டர் செஸ் தொடர் நடைபெற்று வந்தது. இதில் 12 சுற்றுகளின் முடிவில் உலக சம்பியனும் இந்திய கிராண்ட் மாஸ்டருமான டி. குகேஷ், மற்றொரு இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர். பிரக்ஞானந்தா ஆகியோர் தலா 8. 5 புள்ளிகளுடன் சமநிலையில் இருந்தனர். கடைசி மற்றும் 13ஆவது சுற்றில் குகேஷ், சகநாட்டைச் சேர்ந்த அர்ஜுன் எரிகைசியிடமும், பிரக்ஞானந்தா, ஜேர்மனியின் வின்சென்ட் கீமரிடமும் தோல்வியடைந்தனர்.

இதனால் வெற்றியாளரை தீர்மானிப்பதற்கான போட்டியில் குகேஷ், பிரக்ஞானந்தா மோதினர். இதன் முதல் ஆட்டத்தில் குகேஷ் வெற்றி பெற்றார். தொடர்ந்து அடுத்த ஆட்டத்தில் குகேஷ் செய்த தவறை சரியாக பயன்படுத்திக் கொண்டு மீண்டு வந்து பிரக்



ஞானந்தா வெற்றியை வசப்படுத்தினார். இதனால் பிளிட்ஸ் கேம் 1 - 1 என சமநிலையில் முடிவடைந்தது. இதையடுத்து நடைபெற்ற சுற்றில் பிரக்ஞானந்தா வெற்றி பெற்றார். முடிவில் பிரக்ஞானந்தா 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். (எ)

# வருண் சக்கரவர்த்தியை இணைக்க வேண்டும்

## அஸ்வின் வலியுறுத்தல்

சென்னை, பெப்.05

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியிலிருந்து யாரையாவது நீக்கிவிட்டு வருண் சக்கரவர்த்திக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்று முன்னாள் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், "இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்று முடிந்த ரி - 20 தொடரில் வருண் சக்கரவர்த்தி அபாரமாக செயல்பட்டுள்ளார். எனவே, என்னைப் பொறுத்தவரை சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் அவரை சேர்க்க வேண்டும். ஏனெனில், தற்போது இந்திய அணி ஒரு தற்காலிக அணியைத்தான் தெரிவு செய்து அனுப்பியுள்ளது. இதில், நான்கு சுழற்பந்து வீச்சாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால், என்னைப் பொறுத்தவரை யாரையாவது ஒருவரை நீக்கிவிட்டு வருண் சக்கரவர்த்தியை இணைக்க வேண்டும். அதேபோன்று, இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் அவர் விளையாட வேண்டும்"- என்றார். (எ)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து திமுத் கருணாரத்ன ஓய்வு



கொழும்பு, பெப்.05

இலங்கை டெஸ்ட் அணியின் தொடக்க வீரர் திமுத் கருணாரத்ன (வயது -36) சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். நாளை 6ஆம் அம்திகதி தொடங்கவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டிதான் அவரது கடைசி சர்வதேச போட்டி என்று அறிவித்துள்ளார்.

இது அவரது 100ஆவது சர்வதேச டெஸ்ட் போட்டியாகும். அத்துடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அவர் எடுத்துள்ள முடிவு ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவர் இலங்கை அணிக்காக 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 16 சதம் உட்பட 7172 ஓட்டங்கள் குவித்துள்ளார். மேலும் 50 ஒருநாள் போட்டிகளில் விளையாடி ஒரு சதம் உட்பட 1316 ஓட்டங்கள் குவித்துள்ளார். (எ)


# ஆஸியின் சிறந்த வீரராக ட்ராவிஸ் ஹெட் தெரிவு

மெல்பேர்ன், பெப்.05

2024ஆம் ஆண்டின் அவுஸ்திரேலியாவின் சிறந்த வீரராக ட்ராவிஸ் ஹெட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஆண்டுதோறும் சிறந்த வீரர், வீராங்கனைக்கு விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இதன்படி, 2024ஆம் ஆண்டுக்கான அவுஸ்திரேலியாவின் சிறந்த வீரராக நட்சத்திர ட்ராவிஸ் ஹெட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பரிந்துரை பட்டியலில் இடம்பெற்றிருந்த பட் கம்மின்ஸ் மற்றும் ஹேசில்வுட் ஆகியோரை தாண்டி இவர் இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு சிறந்த வீரர் விருதுக்கான ஆலன் பார்டர் பதக்கம் வழங்கப்பட்டது. அவர் இந்த விருதை பெறுவது இதுவே முதல் முறையாகும். அத்துடன் சிறந்த ஒரு நாள் போட்டி வீரராகவும் ட்ராவிஸ் ஹெட் தெரிவு செய்யப் பட்டார். அடம் ஸம்பா சிறந்த ரி - 20 வீரர் விருதையும், ஹேசில்வுட் சிறந்த டெஸ்ட் வீரர் விருதையும் வென்றனர். (எ)




# உலக கிண்ண அணியில் இலங்கையின் சமோதி

டுபாய், பெப்.05

மலேசியாவில் நடைபெற்ற ஐ. சி. சி. 19 வயதுக்குட்பட்ட மகளிர் ரி - 20 உலகக் கிண்ண போட்டியில் அற்புதமாக பிரகாசித்த வீராங்கனைகளைக் கொண்ட உலகக் கிண்ண சிறப்பு அணியில் இலங்கையின் சமோதி ப்ரபோதா பெயரிடப்பட்டுள்ளார்.

12 வீராங்கனைகளைக் கொண்ட இந்த சிறப்பு அணியில் பந்துவீச்சில் திறமையாக செயல்பட்ட சமோதி ப்ரபோதா 10ஆம் இலக்க வீராங்கனையாக பெயரிடப்பட்டுள்ளார்.

ஐந்து போட்டிகளில் விளையாடிய சமோதி ப்ரபோதா 6. 33 என்ற சராசரியுடன் மொத்தமாக 9 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

மலேசியாவுக்கு எதிரான போட்டியில் சமோதி ப்ரபோதா 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றியிருந்தார். உலகக் கிண்ணப் போட்டி ஒன்றில் அதுவே அவரது சிறந்த பந்துவீச்சு பெறுமதியாக இருந்தது.

இந்த சிறப்பு அணியில் நான்கு இந்திய வீராங்கனைகள் இடம்பெறுவதுடன் அணியின் தலைவியாக தென்னாபிரிக்காவின் கேலா ரினேக் பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த அணியில் தமிழ் வீராங்கனை ஒருவர் இடம் பெறுகின்றமையும் விசேட அம்சமாகும். தமிழகத்தின் மதுரை சேர்ந்த குணாலன் கமலினி சிறப்பு அணியில் இடம்பெற்றுள்ளார்.

இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீராங்னையான கமலினி, 7 போட்டிகளில் 2 அரைச் சதங்கள் உட்பட 143 ஓட்டங்களை மொத்தமாக பெற்றிருந்தார்.(எ)



# "ரோஹித், கோலியின் பங்களிப்பு முக்கியம்"

மும்பை, பெப்.05

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான விராட் கோலி மற்றும் ரோஹித் சர்மாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கௌதம் கம்பீர் தெரிவித்தார். மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ரோஹித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் இந்திய கிரிக்கெட் அணியின் மகத்தான வீரர்கள். அவர்கள் அணியில் இருப்பது இந்தியாவுக்கு வலுச் சேர்க்கிறது. எதிர்வரும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அவர்கள் இருவரது பங்களிப்பும் முக்கியமானது. .

நான் ஏற்கனவே சொன்னது போல தேசத்துக்காக விளையாட வேண்டுமென்ற வேட்கை அவர்களிடம் உள்ளது.

அதைச் சிறப்பாக செய்யவே இருவரும் விரும்புகின்றனர். உலகக் கிண்ணத் தொடருடன் ஒப்பிடும் போது சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் முற்றிலும்




வித்தியாசமானது. இதில் ஒவ்வொரு ஆட்டமும் முக்கியமானது.

அதனால் இந்த தொடரை எப்படி ஆரம்பிக்கிறோம் என்பது முக்கியம். இந்தத் தொடரை வெல்ல 5 ஆட்டங்களிலும் வெற்றி பெறுவது அவசியம்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்று...

துணிச்சலான மக்கள் நமது சுதந்திரத்திற்காக அணிவகுத் துச் சென்றனர்.

நமது 77ஆவது சுதந்திர தினம். இந்த தருணத்திற்கு நாம் நீண்ட தூரம் வந்துவிட்டோம். நமது சுதந்திரத்திற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த ஆயிரக்கணக்கான துணிச்சலான ஆண்கள் மற்றும் பெண்களின் இரத்தம், கண்ணீர் மற்றும் வியர்வையால் நாம் இவ்வளவு தூரம் வந்துள்ளோம். நமக்குத் தெரிந்த நாயகர்கள், நாயகிகள், தெரியாதவர்கள். அவர்கள் அனைவருக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த நாட்டில் நவீன குடிமக்களாக பெருமையுடன் வாழத் தேவையான சுதந்திரத்தை உருவாக்க, நமது பொருளாதார சுதந்திரத்திற்காக, நமது சமூக மற்றும் கலாசார சுதந்திரத்திற்காக நாம் ஒன்றாக ஒரு பயணத்தை மேற்கொள்ள வேண்டும். அரசியல் பிரதிநிதிகள் மத்தியில் மட்டுமல்ல, நிறுவனத் தலைவர்கள் மற்றும் ஊழியர்களிடையேயும், அரசு ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில், இன, மத, மத மக்கள் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் வேரூன்றியிருக்கும் சாதி வேறுபாடுகளை நாம் இந்தச் சமூகத்திலிருந்து சுத்தப்படுத்த வேண்டும்.

நாட்டிற்கான பொருளாதார, சமூக மற்றும் கலாசார சுதந்திரத்தை முழுமையாக அடைவதற்கான பிரசாரத்தில், நீங்களும் நானும் ஒரே போர்க்களத்தில் போராளிகள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த தாய்நாட்டிற்காக நாம் அனைவரும் இணைந்து தொடர்ந்து நடத்த வேண்டிய சுதந்திரப் போராட்டம் நம் அனைவருக்கும் உள்ளது. நமது தேசத்திற்காக உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள் மற்றும் மீனவர்களாக, இந்த பணியில் உங்களுக்கு ஒரு பங்கு உண்டு. ஆசிரியர்களாக, நமது தேசத்திற்கான அறிவை உருவாக்கும் அறிவைக் கொண்டு எதிர்கால சந்ததியினரை வளர்ப்பதில் உங்களுக்கு ஒரு பங்கு உள்ளது. நமது நாட்டின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் சுகாதார நிபுணர்களாக, உங்களுக்கு ஒரு பங்கு உண்டு.

பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினராக, எங்கள் குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. உங்கள் அனைவருக்கும் ஒரு தனித்துவமான பங்கு உண்டு. உலகப் பொருளாதார அமைப்பில் பலவீனமானவராக, ஒவ்வொரு அசைவிலும் நசுக்கப்படும் ஒரு நபராக இருப்பதற்குப் பதிலாக, பொருளாதார சுதந்திரத்தை அடைய, நாம் அனைவரும் இந்த தாய்நாட்டிற்கு நம்மை அர்ப்பணிக்க ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். பொருளாதார சுதந்திரத்திற்கான நமது போராட்டத்தில் நமது சமூக மற்றும் கலாச்சார சுதந்திரத்தைப் பற்றி இரண்டாவது சிந்தனை கொடுக்க நாம் தயாராக இல்லை.

நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கும் நாடு வரலாற்றால் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட நாடு அல்ல, மாறாக நீங்கள் வாழ விரும்பும் குடிமைப் பெருமையை மதிக்கும் வளர்ந்த கலாச்சார நாடு. மனித நாகரிகம் இதுவரை அடைந்துள்ள அறிவியல், தொழில்நுட்ப மற்றும் அறிவு சார் சாதனைகளை அனுபவிக்கும் இலங்கையர்களின் உரிமையை உறுதிப்படுத்திய நாடு இது என்பதை நான் உங்கள் முன் உறுதியாகக் கூறுகிறேன், ஏனெனில் வரலாறு வழங்கிய இந்த மகத்தான வாய்ப்பை நாம் தவறவிடுவதற்கு எந்த சட்டபூர்வமான உரிமையும் இல்லை.

மேலும் இந்த சுதந்திரக் கனவை ஒன்றாகக் காண்போம். அந்தக் கனவை ஒன்றாக நனவாக்குவோம். நீங்களும் நானும், நாம் அனைவரும் ஒன்றாக இந்தப் பயணத்தில் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இந்தப் பயணம் நமது தாய்நாடான இலங்கையை, நவீன அரசியல் உலகில் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தின் அழியாத எடுத்துக்காட்டாக மாற்றும். நாம் நிச்சயமாக உலகின் பணக்கார நாடாக மாற முடியாது. ஆனால் நாம் முயற்சித்தால், உலகின் பணக்கார தேசிய உணர்வைத் தழுவி, சமத்துவம் மற்றும் சுதந்திரம் கொண்ட ஒரு மாநிலமாக மாற முடியும் - என்றார். (அ)

## ஆஸ்திரேலியாவில்...

கான்பரா, பெப். 05

ஆஸ்திரேலியாவில் நேற்று இடம்பெற்ற தமிழர் ஒடுக்குமுறை தினப் பேரணியின் பின்னர் இனப்படுகொலை அறிக்கையொன்று ஆஸ்திரேலிய பாராளுமன்றத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தமிழ் ஏதிலிகள் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று தமிழர் ஒடுக்குமுறை நாள் பேரணி இடம்பெற்றது.

ஈழ தமிழ் மக்களிற்கு எதிரான 77 வருட இனப்படுகொலையை நினைவுகூரும் வகையில் நேற்று ஆஸ்திரேலியாவின் கான்பராவில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு வெளியே தமிழர் ஒடுக்குமுறை தின பேரணி இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு நீதி பொறுப்புக்கூறலை கோரியதுடன் இலங்கை அரசாங்கத்தின் கீழ் தொடர்ந்தும் ஒடுக்குமுறையை அனுபவிக்கும் தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்பை கோரினார்கள்.

இந்த பேரணியின் பின்னர் அதில் கலந்துகொண்டவர்கள் ஆஸ்திரேலிய பாராளுமன்றத்துக்குள் சென்று ஈழ தமிழர்களுக்கு எதிராக திட்டமிட்ட முறையில் இனப்படுகொலை முன்னெடுக்கப்படுவதை வெளிப்படுத்தும் ஆவணத்தை ஆஸ்திரேலிய பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

தமிழர் ஏதிலிகள் பேரவையால் தயாரிக்கப்பட்ட இந்த ஆவணம் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட இனப்படுகொலை குறித்து தெளிவான பல விடயங்களை உள்ளடக்கியுள்ளதுடன் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது ஆபத்தானது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. (அ)

## இலங்கை...

கஜேந்திரன், வர்த்தகர்கள் மற்றும் பொது அமைப்புகள் உள்ளிட்ட பலரும் கலந்து கலந்து கொண்டனர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்வரும் விடயங்களை கோரிக்கைகளாக முன்வைத்துள்ளனர்.

1. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும்.

2. தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

3. பௌத்த மயமாக்கல் உடனே நிறுத்தப்பட வேண்டும்.

4. தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடந்து வரும் நில அபகரிப்பு உடனே நிறுத்தப்படவேண்டும்.

5. தாயக வளத்தை அபகரிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

6. தமிழர் தாயக பிரதேசத்தில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்

7. தமிழின படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும்

8. சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்துதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

9. ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

10 எமது நிலம் எமக்கு வேண்டும்.

11. தாயகம், தேசியம், அரசியல் சுய நிரணயம் என்பன எமது உரிமைகள். அவற்றை உடனே அங்கீகரிக்கவேண்டும்

12. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

13 சர்வதேசம் வட்டுக்கோட்டை தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டும்.

14 எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க சர்வதேச நியமங்களுக்கு அமைய எமது தாயக பிரதேசத்தில் பொது வாக்கெடுப்பு நடத்துமாறு சர்வதேசத்தை கோருகிறோம்-என்றுள்ளது. (அ)

## தற்போதுள்ள...

கொண்டு வருமாறு ஜனாதிபதியிடமும், தற்போதைய அரசாங்கத்திடமும் கேட்டுக்கொள்வதாக மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

77ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் நடைபெற்ற ஆராதனையில் பங்கேற்ற போதே பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு எனப்படும் சர்வாதிகார அமைப்புக்கு வழி வகுத்த சட்ட கட்டமைப்பிற்குள் தலைவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அதீத அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாக குறிப்பிட்ட கர்தினால், இதன் விளைவாக இனங்களுக்கு இடையே எளிதில் தீர்க்கப்படக்கூடிய கருத்து வேறுபாட்டை போராக மாற்றி, நாட்டில் ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கியதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்கள் 1990 களில் இருந்து ஊடக ஒடுக்குமுறை, ஊடகவியலாளர்களை காணாமல் ஆக்குதல், வெள்ளை வான் கலாசாரம் மற்றும் எதிரிகளை சிறையில் அடைத்தல் போன்ற பயங்கரச் செயல்களைச் செய்ததாகவும் பேராயர் கூறினார்.

பேரழிவு தரும் போரினால் தாயகம் ஆழமான பொருளாதார வீழ்ச்சியில் மூழ்கியதாக சுட்டிக்காட்டிய பேராயர், கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்தப் போக்கு தீவிரமடைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டார். (அ)

## சுதந்திர தினம்...

மட்டக்களப்பு, பெப். 05

கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று மட்டக்களப்பு - செங்கலடி பகுதியில் முன் னெடுக்கப்பட் டது.

இதன்போது, இலங்கையின் சுதந்திர தினம் எங்களுக்கு கரிநாள், நீங்கள் சுதந்திரம் அனுபவிக்கும் போது நாங்கள் ஒடுக்கப்படுவதா, உங்களுக்கு சுதந்திர நாள் எங்களுக்கு திண்டாட்ட நாள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே, எமது மேய்ச்சல் தரை எமக்கு வேண்டும், நிம்மதியில்லாத நாட்டில் சுதந்திரம் எதற்கு, சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்கு, எங்கே எங்கே உறவுகள் எங்கே உட்பட பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு இந்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

செங்கலடி சித்திவிநாயகர் ஆலயத்துக்கு முன்பாக ஆரம்பமான பேரணியானது பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் கொம்மாதுறை பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக சென்றடைந்ததும் அங்கும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மூன்று மாவட்ட தலைவிகள் மற்றும் உறவினர்கள், இலங்கை தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் நாடாளுமன்றக் குழு பேச்சாளருமான ஞா.சிறீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு நகரில் இந்த போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தினால் நீதிமன்றத்தின் ஊடாக தடை யுத்தரவு பெறப்பட்ட நிலையில் இந்த போராட்டம் செங்கலடியில் நடத்தப்பட்டது.

நேற்று காலை தொடக்கம் மூன்று மாவட்டங்களிலும் புலனாய்வாளர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் உறுப்பினர்களை அச்சுறுத்திய நிலையிலும் மக்கள் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டதாக மட்டக்களப்பு மாவட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி தெரிவித்தார். (அ)

## வட்டுக்கோட்டை...

கிழக்கு மாகாணங்களில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் பிரித்தானியாவில் வாழும் ஈழ மற்றும் உலக தமிழர்களும் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டித்து போராட்டமொன்றை லண்டனில் முன்னெடுத்தனர்.

“தன்னாட்சிக்கான உரிமைக்குரல்” என்ற தொனிப்பொருளில் கீழ் இந்த போராட்டத்தை தமிழர்கள் முன்னெடுத்தனர்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் பிரித்தானிய அரசு தார்மீக அடிப்படையில் காத்திரமான அரசியல் இராஜதந்திர நகர்வை வெளிப்படுத்தவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

உலகத்தமிழினமாக அணி திரண்டு சுதந்திர தமிழீழத்திற்காகப் போராடுவோம் என்றும் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழர்கள் அறைகூவல் விடுத்தனர்.

## சுதந்திர...

அதேவேளை, பல்கலைகழக சூழலில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. சுதந்திர தினத்தினை கரிநாளாக பிரகடனப்படுத்தி யாழ். பல்கலைகழக மாணவர்கள் பல்கலை கழக பிரதான வாயிலின் முன்பாக நேற்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## வங்காலையில்...

பேர் அடங்கிய குழுவினர் அவ்விடத்துக்கு வருகை தந்து கனிய மண் ஆராய்ச்சியை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் சந்தேகம் கொண்ட கிராம மக்கள் அவ்விடத்துக்கு சென்று அவர்களுடன் விசாரணைகளை முன்னெடுத்தபோது, இதாம் பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்துள்ளதாகவும் கனிய மண் ஆராய்ச்சியை மேற்கொண்டு ஆராய்ச்சி வெற்றி பெற்றால் கனிய மணல் அகழ்வு முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அக்கிராம மக்கள் உடனடியாக வங்காலை பங்குத்தந்தை அருட்தந்தை லக்கோன்ஸ் அடிகளாரின் கவனத்துக்கு கொண்டு வந்த நிலையில் அருட்தந்தை சம்பவ இடத்துக்கு வருகை தந்தார். ஆராய்ச்சிக்காக வருகை தந்த குழுவுடன் ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி ஒருவரும் வருகை தந்திருந்தார்.

தாங்கள் உரிய அனுமதியை பெற்று கொண்டு வருகை தந்ததாக குறித்த குழுவினர் தெரிவித்தபோதும் எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளாத நிலையில் அவர்கள் வருகை தந்தமை தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கனிய மணல் ஆராய்ச்சிக்காக வருகை தந்த குறித்த குழுவினர் அங்கிருந்து சென்றனர். (அ)

## யு.எஸ்.எயிட்...

நிறுவனங்களின் கணக்கு உட்பட, விரிவான அறிக்கையை பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்திருப்பதாவது-

மனிதாபிமான உதவி எனும் போர்வையில் ஏனைய நாடுகளில் ஸ்திரமின்மையை உருவாக்க சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனத்தின் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அண்மைய ஆண்டுகளில் சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனத்திலிருந்து மில்லியன் கணக்கான டொலர்களைப் பெற்றுள்ளது.

இதேவேளை, 100 இற்கும் மேற்பட்ட அரசு சாரா நிறுவனங்கள், அரசியல்வாதிகள் மற்றும் ஊடகப் பிரமுகர்கள் இந்த மானியங்களிலிருந்து பயனடைகிறார்கள்.

இருப்பினும், இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து தெளிவான கணக்கு இல்லை. - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# துணை வாகனங்கள் இன்றி வந்த ஜனாதிபதி அநுரகுமார!

கொழும்பு, பெப். 05

77ஆவது தேசிய சுதந்திர தின பிரதான வைபவம், சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. அதற்காக சுதந்திர சதுக்கத்துக்கு மூன்று பொலிஸ் மோட்டார் சைக்கிள்களின் பாதுகாப்புடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வந்தார்.

அம்புலன்ஸ்கள் அல்லது பிற துணை வாகனங்கள் எதுவும் இல்லை. பிரதமரும் மற்ற விருந்தினர்களும் வந்தபோது, ஒரே ஒரு பொலிஸ் மோட்டார் சைக்கிள் மட்டுமே முன்னால் வந்தது.

முன்னதாக, சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் ஜனாதிபதி மற்றும் பிற தலைவர்கள் தங்கள் மனைவிகள் மற்றும் கணவர்களுடன் வருகை தருவது வழக்கம். ஆனால் இம்முறை அப்படி எதுவும் நடக்கவில்லை. (அ)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் குருதிக்கொடை!



முல்லைத்தீவு, பெப். 05

நாட்டின் 77ஆவது சுதந்திர தினத்தை சிறப்பிக்கும் முகமாக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலை இரத்த வங்கியினால் குருதிக்கொடை முகாம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

இக்குருதிக்கொடை முகாமில் இராணுவத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு முல்லைத் தீவு மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி வைத்தியர் சசினி விஜயரத்ன தலைமையிலான வைத்தியர்களிடம் குருதிக்கொடை வழங்கினர்.

பல்வேறுபட்ட தேவைகளுக்காகவும் இரத்த தானம் என்பது மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கின்ற போதிலும் இரத்த தானம் செய்கின்ற மக்களின் அளவு குறைவாக இருப்பதனால் மதகுருமார்களின் உதவியை இனிவரும் காலங்களில் நாடியுள்ளதாகவும் முல்லைத் தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்த தட்டுப்பாடு தொடர்ச்சியாக இருப்பதாகவும் இதனை நிவர்த்தி செய்ய அனைவரும் ஆதரவு தருமாறு இரத்த வங்கியின் வைத்தியர் தெரிவித்தார். (அ)

# கொள்கலன் விவகாரம் தொடர்பில் அரசு அறிக்கை வெளியிடவேண்டும்!

## திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை

கொழும்பு, பெப். 05

சுங்கத் திணைக்களத்தினால் பரிசோதனைகள் இன்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுங்கத் திணைக்களத்திலிருந்து எவ்வித பரிசோதனைகளும் செய்யப்படாமல் முந்நூறுக்கும் அதிகமான கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டன. இவை தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அரசாங்கத்துக்கு தேர்தல் காலத்தில் உதவியோருக்கு சொந்தமான கொள்கலன்கள் அவை என சொல்லப்படுகின்றன. இந்த விடயத்தில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் அரசாங்கம் மௌனமாக இருக்கிறது.

குறிப்பாக, இவ்வாறு விடுவிக்கப்பட்ட கொள்கலன்கள் கட்டாய பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்ற உத்தரவு இருந்ததாக சுங்கத் திணைக்கள தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. அவ்வாறானால் எதற்காக அவை விடுவிக்கப்பட வேண்டும்.

அவற்றில், சட்டவிரோத பொருட்கள் இருந்தனவா? ஆயுதங்கள் இருந்தனவா? போதைப்பொருட்கள் இருந்தனவா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஆதலால் இது குறித்த உண்மையான அறிக்கையை அரசாங்கம் வெளியிட வேண்டும் - என்றார். (அ)

# அமைச்சர்களுக்கான வாசஸ்தலங்களின் மதிப்பீட்டு அறிக்கை அமைச்சரவைக்கு!

கொழும்பு, பெப். 05

**அமைச்சர்களின் வாசஸ்தலங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் எதிர்வரும் வாரத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

அந்த வாசஸ்தலங்களின் மதிப்பீடு தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கூறுகிறது.

இந்த வாசஸ்தளங்கள் தொடர்பாகப் பல திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்த முன்மொழிவுகளில் சிறந்த திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பில் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உளளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன இதனைத் தெரிவித்தார்.

அந்த வாசஸ்தலங்களைப் பொருளாதார ரீதியாக வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பல அரச மற்றும் தனியார் நிறுவனங்களும் அமைச்சர் வாசஸ்தளங்களை வாடகைக்கு விடுமாறு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அந்தக் கோரிக்கை தொடர்பான விடயத்தையும் பரிசீலித்து வருவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# 323 கொள்கலன் சோதனையின்றி விடுவிப்பு; சுங்க அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு !

கொழும்பு, பெப். 05

துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்பட்டமை தொடர்பாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இலங்கை சுங்க அதிகாரிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

இந்த சம்பவம் குறித்து அவசர விசாரணை நடத்துமாறு கோரி சமூக ஆர்வலர்கள் குழு ஒன்று பொலிஸ் தலைமையகத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுங்க அனுமதி செயல் முறையில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக அண்மைய காலமாக சுங்க சோதனை கூடங்களில் கடுமையான கொள்கலன் நெரிசல் ஏற்பட்டது.

கொள்கலன் அனுமதி செயல்பாட்டில் ஏற்படும் தாமதங்களை நிவர்த்தி செய்வதற்காக இலங்கை சுங்கம் கடந்த 30 ஆம் திகதி முதல் நான்கு நாட்கள் விசேட திட்டத்தைச் செயல்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுதந்திர தின விழாவில் ஏராளமான எதிர்க்கட்சி எம்.பிக்களும் பங்கேற்பு

கொழும்பு, பெப். 05

சுதந்திர சதுக்கத்தில் நேற்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் ஏராளமான எதிர்க்கட்சி எம்.பிக்கள் பங்கேற்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸச, எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக, பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, சமிந்திரனி கிரியெல்ல, வி.ராதாகிருஷ்ணன், ரவி கருணாநாயக்க உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

"தேசிய தின கொண்டாட்டங்களில் பங்கேற்க நாங்கள் எப்போதும் தவறாதது, அது எங்கள் கடமை என்பதால் தான்" என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா காயத கருணாதிலக்க தெரிவித்தார். (அ)

# சுதந்திரதின நிகழ்வில் நேற்று தமிழ்மொழியில் தேசிய கீதம்!

கொழும்பு, பெப். 05


இலங்கையின் 77ஆவது சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இந்த நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற தேசிய சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழ் மொழியில் இசைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

தேசியக் கொடி ஏற்றப்படும் போது, சிங்கள மொழி மூலம் தேசிய கீதம் இசைக்கப்பட்ட நிலையில், அணிவகுப்புக்கள் அனைத்தும் முடிவுற்ற பின்னர் தமிழ் மொழி மூலமும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பயவின் காலத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கும் முறை நிறுத்தப்பட்டது.

தற்போது மீண் டும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவின் ஆட்சியில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# நல்லிணக்கத்தை வலியுறுத்தி வவுனியாவில் வாகன பேரணி





வவுனியா, பெப். 05

இலங்கையின் 77வது சுதந்திர தினத் தினை முன்னிட்டு நல்லிணக்கத்தினை வலியுறுத்தி வவுனியாவில் மூவின மக்களை இணைத்து வாக னப் பேரணி ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணி வன்னி மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இப்பேரணி வவுனியா புதிய பஸ் நிலை யத்துக்கு முன்பாக மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத் சந்திர மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலா ளர் ஆகியோர் கலந்து கொண்டதுடன், மாவட்ட செயலாளரால் குறித்த பேரணி ஆரம்பித்து வைக்கப்பட் டது.

மேலும் இப்பேரணி பஜார் வீதியின் ஊடாக வவுனியா தெற்கு வலயக்கல்வி அலு வ லகத்துக்கு முன்பாக முடிவடைந்தது. (அ-10)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org